தினமணி

**மாவுப் பூச்சியை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள்!**

First Published : 19 May 2011 01:07:59 PM IST

வேலூர்: வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் பப்பாளி மாவுப்பூச்சித் தாக்குதலை ஒட்டுண்ணியை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம் என வேலூர் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. சுமதி
தெரிவித்தார்.

பப்பாளி மாவுப் பூச்சி இலையின் அடிப்பகுதியில் நரம்புகளைச் சுற்றித் தாக்கும். பின்னர் காய்களுக்கும் பரவி சேதம் விளைவிக்கும். அப்போது தேன் போன்ற திரவம் சுரப்பதினால் கரும் பூஞ்சாணப் படலம் தென்படும்.

செடிகளின் இலைகள் பழுத்து கொட்டும். இதனால் செடிகள் இறந்துவிடும்.

இதன் தாக்குதல் பப்பாளி, மரவள்ளி, பருத்தி, வெண்டை, தக்காளி, கத்தரி, துவரை, கொய்யா, மாதுளை, உளுந்து, பச்சைப்பயறு, துவரை, சூரியகாந்தி உள்ளிட்டவைகளில் காணப்படுகிறது.

இப்பூச்சி கோடையில் வேகமாக பரவும். மழைக்காலத்தில் இதன் வளர்ச்சி
தடைபடும்.

கட்டுப்படுத்தும் முறை: இந்த பூச்சிகளை அழிக்க இப்போது ஒட்டுண்ணி முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. இரை விழுங்கிகளான கிரிப்டோ லீமஸ் பொறிவண்டு, கிம்னஸ் பொறிவண்டு, ஸ்பால்ஜியஸ் என்ற பட்டாம்பூச்சி வகையைச் சேர்ந்த பூச்சியின் புழுக்களை கொண்டு கட்டுப்படுத்தலாம்.

இப்போது வேளாண்மை அறிவியல் நிலையம் அசிரோபேகஸ் பப்பாயே ஒட்டுண்ணியை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு இலவசமாக
வழங்கி வருகிறது. இவை மாவுப் பூச்சிகளை விழுங்கி அழித்துவிடும்.

ஒட்டுண்ணிகளை விடும்போது பூச்சி மருந்துகளை பயிர்களுக்கு தெளிக்கக் கூடாது. அப்படி தெளித்தால் ஒட்டுண்ணிகள் அழிந்துவிடும்.

தற்காப்பு முறைகள்

பூச்சி தாக்கப்பட்ட பழங்கள், மரம், செடிகளை அகற்றி வயலின் வெளியே போட்டு எரித்துவிட வேண்டும். நாற்றுகள், செடிகள் வாங்கும்போது பூச்சி தாக்குதல் இல்லாதவற்றை வாங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

**விதை வெங்காயம் விலை உயர்வு**

First Published : 19 May 2011 12:43:35 PM IST

பல்லடம், மே 18: விதை வெங்காயத்தின் விலை உயர்வால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சின்ன வெங்காயம் நடவு செய்ய வைகாசி சிறந்த மாதம் ஆகும். அண்மையில் பெய்த கோடை மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் சின்ன வெங்காயம் விதை கொள்முதல் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வெங்காய குடோன்களில் விதை வெங்காயம் விற்பனைக்கு வந்த சில மணி நேரத்தில் விற்று தீர்ந்து விடுகிறது. பல விவசாயிகள் திருச்சி, துறையூர் போன்ற ஊர்களுக்கு சென்று விதை வெங்காயம் கொள்முதல் செய்து வந்துள்ளனர். முதல் தரம் விதை கிலோ ரூ.40க்கும், இரண்டாம் தரம் ரூ.35க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த விலை உயர்வால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அதிக விலைக்கு விதை வெங்காயம் வாங்கி பயிரிட விருப்பம் இல்லாத விவசாயிகள் பீட்ரூட், உளுந்து, பாசிப்பயறு போன்றவை பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.

இதன் காரணமாக வரும் காலத்தில் வெங்காய உற்பத்தி குறைந்து, வெங்காயத்தின் விலை உயரும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**மிளகாய் வற்றலுக்கு அதிக விலை**

First Published : 19 May 2011 01:08:25 PM IST

விழுப்புரம்: வணிக ரீதியான பயிர்களில் மிக முக்கியமான ஒன்றாக விளங்கும் மிளகாய் வற்றலுக்கு மே,

ஜூன் மாதத்தில் அதிக விலை கிடைக்க வாய்ப்புள்ளதாக வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப்படும் மிளகாய் வற்றல், இவ்விரு மாவட்டங்களில் மட்டும் 62.5 சதவீத இடத்தை பிடித்துள்ளது.

ஆனால் தற்போது பரவலாக எல்லா மாவட்டங்களிலும் பயிரிடப்பட்டு வருகிறது. நாட்டில் 2008-09-ல் 801.070 ஹெக்டேர் பரப்பளவில் 1,353.796 டன் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நறுமணப் பொருள்கள் வாரியத்தின் கணக்கீட்டின்படி ஏப்ரல் 2010 முதல் ஜனவரி 2011 வரையிலான மிளகாய் ஏற்றுமதி இரண்டு லட்சம் டன்கள். இதன் மதிப்பு ரூ.1255.52 கோடியாகும்.

இந்திய மிளகாய் இலங்கை, வங்காளம், மலேசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வற்றல் தவிர மிளகாய் விதைகள், எண்ணெய், பசை, மிளகாய்ப் பொடி மற்றும் மிளகாய் ஊறுகாய்கள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மிளகாய் பசை மற்றும் மிளகாய் எண்ணெய் இரண்டையும் அதிகளவில் அமெரிக்கா இறக்குமதி செய்கிறது.

ஆகஸ்ட் முதல் பிப்ரவரி மாதம் வரை இப்பயிர் பயிரிடப்படுகிறது. மிளகாய் அறுவடைப் பருவம் தமிழகத்தில் நடந்து வருகிறது. 2011 ஏப்ரல் மாதத்துக்கான மிளகாய் முன்பேர வர்த்தக விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.8,514 ஆக உயர்ந்துள்ளது.காய்ப்பிடிப்பின் போது, ஏற்பட்ட மழையின் காரணமாக, வேலை ஆள்கள் குறைபாட்டால் சாகுபடி பரப்பளவு குறைந்ததால் இந்த ஆண்டு விளைச்சல் குறைவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் 2010 ஆகஸ்ட் மாதத்தில் குவிண்டாலுக்கு ரூ.5,260 என்ற நிலையிலிருந்து விலை உயர்ந்து கொண்டே வருகிறது.

இந்நிலையில் இது குறித்து வேளாண் வணிக துணை இயக்குநர் ம. சண்முகம் கூறியது: "அறுவடை செய்த வற்றலை விவசாயிகள் சந்தைப்படுத்த ஏதுவான வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மை புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், விருதுநகர் சந்தையில் நிலவிய கடந்த 10 ஆண்டுகளின் விலையை ஆராய்ந்தது.

ஆய்வு முடிவுகள் ஏப்ரல் முதல் ஜூன் வரை ஒரு கிலோவுக்கு வற்றலின் விலை ரூ.77 முதல் ரூ.91 வரை நிலவும் எனத் தெரிவிக்கின்றன. மே மாதத்திலிருந்து அதிக விலை கிடைக்கவும் வாய்ப்புள்ளது.

எனவே விவசாயிகள் வற்றலை சேமித்து வைத்து மே, ஜூன் மாதங்களில் விற்று லாபம் அடையலாம்' என்று தெரிவித்தார்.

**நாளை விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்**

First Published : 19 May 2011 09:39:57 AM IST

விழுப்புரம், மே 18: விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வுநாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாளை (20-ம் தேதி) நடைபெறுகிறது என்று ஆட்சியர் ஆர். பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கடந்த இரண்டு மாதங்களாக தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் இக்கூட்டம் நடைபெறவில்லை. தற்போது நடத்தை விதிகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இக்கூட்டம் 20-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களின் மீது அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள், முடிக்கப்பட்ட முடிவுகள் குறித்து தெரிவிக்கப்படவுள்ளது.

மேலும் பெறப்படும் மனுக்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்வதற்காக சம்மந்தப்பட்ட அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். எனவே விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் தங்களது கோரிக்கையினை அல்லது குறைகளை மனுக்கள் மூலம் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கி உரிய தீர்வினை பெற்றுச்செல்லலாம்.

தினமலர்

**உணவு பொருள் பணவீக்கம் 7.47சதவீதமாக குறைந்தது**

மே 20,2011,00:03



புதுடில்லி: நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், மே 7ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 7.47சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 7.70சதவீதமாக இருந்தது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் மதிப்பிடப்படும் உணவுப் பொருள் பணவீக்கம், தொடர்ந்து மூன்று வாரங்களாக குறைந்துள்ளது. பருப்பு வகைகள், காய்கறிகள், கோதுமை உள்ளிட்டவற்றின் விலை குறைந்துள்ளதையடுத்து, இப்பணவீக்கம்சரிவடைந்துள்ளது.
உணவுப்பொருள் பணவீக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட, 18 மாதங்களுக்கு பிறகு, தற்போது மிகவும் குறைந்துள்ளது. இருப்பினும், கணக்கீடு செய்து கொள்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் விலை, சென்றாண்டின் இதே வாரத்தை விட, 8.87 சதவீதம்

குறைந்திருந்தது. காய்கறிகள் 3.6 சதவீதமும், கோதுமை விலை, 0.06 சதவீதமும் குறைந்திருந்தது.உணவுப் பொருள்கள் அல்லாத பிரிவில், நூலிழை விலை 62 சதவீதம் உயர்ந்திருந்தது. தாதுப்பொருள்கள் விலை 11.95 சதவீதமும், எரிபொருள் மற்றும் மின்சாரம் 12.11 சதவீதமும் உயர்ந்திருந்தது.நாட்டின் பொது பணவீக்க விகிதம், சென்ற ஏப்ரல் மாதத்தில், 8.66 சதவீதமாகவும், மார்ச் மாதத்தில், 9 சதவீதத்திற்கு அதிகமாகவும் இருந்தது.பொது பணவீக்கம் அதிகரித்து வருவதை தடுத்து நிறுத்தும் வகையில் ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை இம்மாத தொடக்கத்தில் 0.50 சதவீதம் உயர்த்தியது.கடந்த 2010ம் ஆண்டு, மார்ச் மாதத்திலிருந்து இதுவரையிலுமாக, ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை ஒன்பது முறை உயர்த்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாய நிலத்தில் மழைநீர் சேமிப்பு முறை: வேளாண் உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : மே 20,2011,02:05 IST

ராசிபுரம்: "விவசாய நிலங்களில் உள்ள தாழ்வான பகுதியில், பண்ணை குட்டை அமைத்து மழை நீரை சேமிக்க வேண்டும்' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:மழை நீரை முழுமையாகவும், முறையாகவும் சேமிப்பதன் முலம் நிலத்தடி நீர் வளத்தை பெருக்க முடியும். தற்போது, மாறி வரும் இயற்கை சூழ்நிலையில், பெய்யும் மழை நீரை விவசாயிகள் முறையாக சேமிக்கும் முறையை அறிந்து கொள்ள வேண்டும். கோடை உழவு குறைந்தது மூன்று முறை செய்ய வேண்டும். நிலத்தின் சரிவுக்கு குறுக்கே உழவு செய்ய வேண்டும். ஆழ்சால் அகல பாத்தி அமைத்து, மூன்று வருடத்துக்கு ஒரு முறை உளிக்கலப்பை கொண்டு உழவு செய்ய வேண்டும். சரிவுக்கு குறுக்கே, சம உயர வாய்ப்புகள் அமைக்க வேண்டும். வயல் வரப்புகளை அகலப்படுத்தி உயர்த்தி கட்ட வேண்டும். சரிவு அதிகமாக உள்ள இடங்களில், சம உயர கல் வரப்புகள் அமைக்க வேண்டும். விவசாய நிலங்களிலேயே தாழ்வான பகுதிகளில், பண்ணை குட்டை அமைத்து மழை நீரை சேமிக்க வேண்டும். மேலும், வடிகட்டி தொட்டி அமைத்து, குழாய் கிணறுகளிலும், திறந்த வெளி கிணறுகளிலும் மழை நீரை சேமிக்க வேண்டும். இதுபோன்ற முறைகளை கடைபிடிப்பதன் மூலம் ஆண்டின் சில நாட்களில் மட்டும் பெய்யும் மழைநீரை பூமிக்கடியில் சேகரித்து, நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்கலாம். எனவே, இம்முறையை கடைபிடித்து, மண்வளத்தை பாதுகாத்து, நீடித்த நிலையான வேளாண்மைக்கு விவசாயிகள் வழி வகுத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சூரியகாந்தி விதைகளை உடனே விற்க அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : மே 20,2011,00:33 IST

தர்மபுரி: "சூரியகாந்தி விதைக்கு சந்தையில் விலை குறைந்து வருவதால், விதைகளை உடனே விற்பனை செய்யுமாறு' வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) நாகராஜன் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில், விளை பொருட்களை சந்தைப்படுத்துவதில் முக்கிய முடிவுகளை விவசாயிகள் மேற்கொள்ளவதற்காக, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கடந்த 11 ஆண்டுகளாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்தது. ஏப்ரல், மே மாதங்களில் சூரியகாந்தி விதை ஒரு கிலோவுக்கு, 27.30 ரூபாய் இருக்கலாம் என தெரியவந்துள்ளது. 100 மில்லி லிட்டர் அளவில் 40 முதல் 42 கிராம் எடையுள்ள விதைகளுக்கு அதிக விலை கிடைக்கும். விதையின் எடையை பொருத்து விலையில் மாற்றமிருக்கும். இனிவரும் நாட்களில், சந்தையில் விலை குறைய வாய்ப்பு உள்ளது. அதனால், தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் சூரியகாந்தி விதைகளை உடனே விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

**"எண்டோசல்பான்' விற்க தடை வேளாண்மைத்துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : மே 20,2011,01:14 IST

கந்தர்வக்கோட்டை: கந்தர்வக்கோட்டை வட்டாரத்திலுள்ள பூச்சிகொல்லி மருந்து விற்பனையாளர்கள் இருப்பில் வைத்துள்ள எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்தை விற்பனை செய்ய எட்டு வாரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.கந்தர்வக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனருமான ரவீந்திரன் அறிவித்துள்ளதாவது: கந்தர்வக்கோட்டை வட்டாரத்திலுள்ள தனியார் அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பூச்சி மருந்து உரிமம் பெற்று பூச்சி மருந்துகள் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உரிமம் பெற்று விற்பனை செய்யப்படும் பூச்சி மருந்து நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு எண்டோசல்பான் இருப்பு கணக்கு எடுக்கப்பட்டது. உச்சநீதிமன்ற ஆணைப்படி எட்டு வாரங்களுக்கு தடை செய்யப்பட்ட எண்டோசல்பான் பூச்சி மருந்தை வாங்கி இருப்பு வைத்து விற்பனை செய்யக் கூடாது என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதனை மீறி விற்பனை செய்யும் பூச்சி மருந்து நிலையங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படுவதுடன் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, பொது

மற்றும் விவசாயிகள் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எட்டு வாரம் காலத்தில் எண்டோசல்பான் வாங்கி உபயோகிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

**பெண்கள் தேனீ வளர்க்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 20,2011,02:11 IST

மதுரை : ""வளர்ந்து வரும் தொழிலாக, தேனீ வளர்ப்பு மாறி வருவதால், பெண்கள் பயிற்சி பெறலாம்'', என கதர் கிராமத் தொழில்கள் ஆணைய (கே.வி.ஐ.சி.,) கோட்ட உதவி இயக்குனர் மோடக் தெரிவித்தார். அவர் கூறியதாவது: பிரதமரின் வேலைவாய்ப்பு பெருக்க திட்டத்தின் கீழ் (பி.எம்.இ.ஜி.பி.,) கடந்தாண்டு 227 திட்ட அறிக்கைகளும், 317.8 கோடி ரூபாய் மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலக்கைத் தாண்டி, 240 திட்ட அறிக்கைகள் தேர்வு செய்யப்பட்டு, 360.8 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. மேலும் காதி மறுமலர்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (கே.ஆர்.டி.பி.,) மதுரை மண்டலத்திற்குட்பட்ட ஏழு நிறுவனங்களுக்கு தலா 1.19 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இந்தாண்டு 2223 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, திட்ட மதிப்பீட்டில் 311 கோடி ரூபாய் மானியம் வழங்க திட்டமிட்டுஉள்ளோம். மதுரை மண்டலத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேனீ வளர்ப்போர் கூட்டமைப்பு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். இக்கூட்டமைப்பில் 600 பேர் வரை சேரலாம். தேனீ வளர்ப்புத் தொழிலை விரும்புபவர்களுக்கு இலவச பயிற்சி, திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. வளர்ந்து வரும் சிறப்பான தொழிலாக தேனீ வளர்ப்பு மாறிவருவதால், பெண்கள் பங்கேற்கலாம். வீட்டில் இருந்தவாறே தொழில்செய்ய ஏற்றது, என்றார்.முகவரி : கதர் கிராமத் தொழில்கள் ஆணையம், பை-பாஸ் ரோடு, மதுரை - 625 016. போன் : 2386792.

**சித்திரை பட்டத்தில் மக்காசோளம் விதைத்தால் அதிக விலை பெற முடியும் : வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : மே 20,2011,01:55 IST

திருநெல்வேலி : சித்திரை பட்டத்தில் மக்காச்சோளத்தை விதைத்தால், விவசாயிகள் அறுவடையின் போது நல்ல விலை பெறலாம் என நெல்லை வேளாண்மை துணை இயக்குநர்(வேளாண் வணிகம்) தியாகராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள உள் நாட்டு மற்றும்

ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த ஜனவரியில் அறுவடையாகிய மக்காசோளத்தை ஏப்ரல் மாதம் வரை இருப்பு வைத்து விற்றால் நல்ல விலை கிடைக்கும் என ஏற்கனவே பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில், விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்று ஒரு குவிண்டாலுக்கு 200 ரூபாய் வரை அதிக விலை பெற்றனர். மேற்கண்ட சந்தை தகவல் மையம், சித்திரை பட்டத்தில் மக்காசோளம் சாகுபடி செய்தால், அறுவடை மாதமான ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் ஒரு குவிண்டாலுக்கு ஆயிரத்து 200 முதல் ஆயிரத்து 350 ரூபாய் வரை விலை கிடைக்கும் என தெரிவித்துள்ளது. எனவே விவசாயிகள் சித்திரை பட்டத்தில் மக்காசோளத்தை விதைத்தால் அறுவடையின் போது நல்ல விலை பெற்று பயனடையலாம். இவ்வாறு வேளாண் துணை இயக்குநர் தியாகராஜன் அறிக்கையில் கூறியுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## ***உணவு பொருள் பணவீக்கம் 7.47 சதவீதமாக குறைந்தது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவு பொருள் பணவீக்கம் மே 7–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், கடந்த 18*

மாதங்களில் இல்லாத அளவிற்கு 7.47 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 7.70 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து மூன்று வாரங்களாக உணவு பணவீக்கம் குறைந்து வருகிறது.

பருப்பு வகைகள்

பருப்பு வகைகள், காய்கறி, கோதுமை விலை குறைந்து வருவதே இதற்கு காரணமாகும். கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓராண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் மற்றும் காய்கறி விலை முறையே 8.87 சதவீதம் மற்றும் 3.61 சதவீதம் குறைந்துள்ளது.

கோதுமை விலை 0.06 சதவீதம் குறைந்துள்ளது. நடப்பு 2010–11–ஆம் வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) கோதுமை உற்பத்தி வரலாறு காணாத அளவில் அதிகரிக்கும் என மத்திய அரசின் மூன்றாம் கட்ட மதிப்பீடு தெரிவிக்கிறது.

இருப்பினும், இதர உணவு பொருள்கள் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பழங்கள் மற்றும் பால் விலை முறையே 30 சதவீதம் மற்றும் 4.56 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 5.67 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம் விலை 10.53 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், தானியங்கள் விலை 4.79 சதவீதம் அதிகரித்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 23.82 சதவீதமாக உள்ளது.

சர்வதேச அளவில் விளைபொருள்கள், குறிப்பாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால், இனிவரும் மாதங்களில் உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் என பாரத ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

பொது பணவீக்கம்

சென்ற ஏப்ரல் மாதத்தில் பொது பணவீக்கம் 8.66 சதவீதமாக உள்ளது. பாரத ரிசர்வ் வங்கி, நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இது 9 சதவீதமாக இருக்கும் என்றும், நிதி ஆண்டின் இறுதியில் 6 சதவீதமாக குறையும் என்றும் தெரிவித்துள்ளது. பணவீக்கம் அதிகரிப்பிற்கு மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்து வருவதும் ஒரு காரணமாகும். எனவே, ரிசர்வ் வங்கி ஜூன் மாதம் வெளியிடும் கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி ஒரு குவிண்டால் ரூ.8000–க்கு விற்பனை



மஞ்சள் குவித்து வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

முத்தூர், மே.20–

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ் சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வரு கிறது. ஒரு குவிண்டால் ரூ.8 ஆயிரத் துக்கு விற் பனை செய்யப்பட்டது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

தமிழகத்தில் ஈரோடு, திருப் பூர், கோவை, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மஞ்சள் சாகுபடி அதிக அளவில் செய்யப்பட்டு வருகிறது. இம் மாவட்டங்களில் உள்ள விவ சாயிகள் தங்களது தோட்டத் தில் விளையும் மஞ்சள்களை மஞ்சள் விற்பனைக்கு புகழ் பெற்ற மஞ்சள் மாநகரமான ஈரோடு மஞ்சள் மார்க்கெட் மற்றும் ஒழுங்குமுறை விற்ப னைக்கு கூடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து பலன் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஈரோட்டில் மஞ்சள் விலை ஒரு குவிண்டால் ரூ.17,000–ஐ தாண்டி விற்பனை ஆனது. இதனால் ஈரோடு திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த ஏரா ளமான மஞ்சள் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள். இதனால் இம்மாவட்டங்களில் மஞ்சளின் சாகுபடி பரப்பு அதிக ரித்தது.

விவசாயிகள் அதிர்ச்சி

இந்த நிலையில் ஈரோட்டில் செயல்பட்டு வரும் மஞ்சள் மார்க்கெட், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகியவற் றிற்கு தினந்தோறும் ஆயிரத் துக்கும் மேற்பட்ட மஞ்சள் மூடைகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. தமிழகம் மட்டும் இன்றி, கர்நாடக மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் புதிய மஞ்சள்களும் தற்போது இங்கு அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதனால் மஞ்சள் வரத்து தினந்தோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது. மஞ்சள் வரத்து எதிர்பாராத விதமாக தொடர்ந்து அதிகரித்துள் ளதால் ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சளின் விலை படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருகிறது.

இதன்படி தற்போது ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிக பட்சமாக ரூ.8000 க்கும் குறைந்த பட்சமாக ரூ.7500 க்கும், கிழங்கு மஞ்சள் ஒரு குவிண்டால் அதிக பட்சமாக ரூ.8000–க்கும் குறைந்தபட் சமாக ரூ.7000 க்கும் மஞ்சள் வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்து வாங்கி செல்கின்றனர். வெளிநாடுகளுக்கு மஞ்சளின் தேவை அதிகரித்துள்ளதால் மஞ்சள் ஏற்றுமதியும் தற்போது தங்கு தடையின்றி நடைபெற்று வருகிறது. இருப்பினும் கடந்த ஒரு மாத காலத்தில் மஞ்சளின் விலை குவிண்டாலுக்கு ரூ.2000 கிடுகிடுவென குறைந்து மஞ்சள் விவசாயிகளை அதிர் ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

விவசாயிகள் எதிர்பார்ப்பு

திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களில் மஞ்சள் அறுவடை பணிகள் 80 சதவீதத்துக்கும் மேல் முடிவ டைந்துள்ளது. இந்த மாவட் டங்களில் உள்ள மஞ்சள் விவசாயிகள் மஞ்சளுக்கு கூடு தல் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்த்து காத்திருக்கிறார் கள். இதற்காக தற்போது அறு வடை செய்யப்பட்ட மஞ்சள் களை நன்கு நீராவி எந்திரம் மூலம் வேக வைத்து காய வைத்து பாலீஸ் செய்து தயார் நிலையில் மஞ்சளை மூடை களாக கட்டி இருப்பு வைத்துள் ளனர்.

இந்த நிலையில் ஈரோடு மஞ்சள் மார்க்கெட் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகியவற்றில் மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருவது மஞ்சள் விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மஞ்சளின் விலை தொடர்ந்து உயருமா? அல்லது இன்னும் விலை குறையுமா? என்று மஞ்சள் விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,730–2,760

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,950–3,975

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,675–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,917–00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரிஉள்பட) 11,000–00
டின் (15 கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரிஉள்பட) 10,900.00
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,475.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,115.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 580–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மே.19–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(60கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மே.19–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 7,422
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 12,591
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 12,457
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 12,654
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,795
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,935
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,965

## எண்ணை மார்க்கெட்

கோவை,மே.19–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,520 | 98.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1120 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 75 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1010 | (–) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1120 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1620 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,035 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,380 | 90.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,030 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,030 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.209.00 | அதிகபட்சவிலை | ரூ.289.00 |
| சராசரி விலை | ரூ.180.34 | சராசரி விலை | ரூ.281.07 |
| குறைந்தபட்சவிலை | ரூ.140.00 | குறைந்தபட்சவிலை | ரூ.271.00 |

**பட்டு நூல் ரூ.1,944**

## கோவை உழவர் சந்தை

கோவை,மே.19–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 80–00 | காலிப்பிளவர் | ரூ. | 20–24 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–16 | பொறியல் தட்டை | ரூ. | 11–12 |
| வெண்டைக்காய் | ரூ. | 14–16 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8–10 | தேங்காய் | ரூ. | 12–14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10–12 | பட்டாணி | ரூ. | 70–80 |
| புடலை | ரூ. | 8–10 | பூண்டு | ரூ. | 90 –100 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22–24 | கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| சுரைக்காய் | ரூ. | 10–12 | அகத்தி | ரூ. | 16–00 |
| பாகற்காய் | ரூ. | 18–20 | வாழைக்காய் | ரூ. | 16–00 |
| கொத்தவரை | ரூ. | 12–13 | குடைமிளகாய் | ரூ. | 36–00 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 | சாதா பீன்ஸ் | ரூ. | 24–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 36–00 |
| சௌசௌ | ரூ. | 16–18 | கறிபீன்ஸ் | ரூ. | 24–28 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12–14 | புஸ்பீன்ஸ் | ரூ. | 30–32 |
| குண்டு மிளகாய் | ரூ. | 22–00 | காளான் | ரூ. | 80–140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 20–21 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11–00 | மாங்காய் | ரூ. | 8–10 |
| இஞ்சி | ரூ. | 32–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 26–28 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 17–18 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22–24 | கொய்யா1கிலோ | ரூ. | 26–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 60–120 |
| கருணைகிழங்கு | ரூ. | 28–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–14 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 80–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | மாம்பழம் | ரூ. | 15–20 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 115–130 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 15–00 |
| முள்ளங்கி | ரூ. | 10–12 | நெல்லிக்காய் | ரூ. | 44–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18–20 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8–10 | வெள்ளரி | ரூ. | 10–26 |
| நூல்கோல் | ரூ. | 20–00 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| கொத்தமல்லி | ரூ. | 30–36 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20–00 | அவரை | ரூ. | 30–32 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| கலர்கோஸ் | ரூ. | 12–00 | மக்காச்சோளம் | ரூ. | 8–00 |
| புதினா | ரூ. | 15–00 | தர்பூசணி | ரூ. | 9–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.26700 |
| மிளகு (சேட்டன்) | ரூ.27100 |
| மிளகு (வயநாடன்) | ரூ.28100 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 15,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10500 |
| சுக்கு(புதியது) | ரூ.10000 |
| சுக்கு(பழையது) | ரூ.16100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1500 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10350 |
| கொப்பரை நாடன் | ரூ.6300 |
| கொப்பரை ராசு | ரூ.6750 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6800 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.7050 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7750 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21900 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22400 |
| ரப்பர் பால் | ரூ. 16000 |
| காப்பி | ரூ. 9100 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6000 |
| நேந்திரகாய் | ரூ. 1400 |
| இஞ்சி | ரூ. 1000 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,392.00 | 16,304.00 | 16400.00 |
| ஒரு கிராம் | 2,049.00 | 2,038.00 | 2050.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 53,810.00 | 51,100.00 | 57,500.00 |
| ஒரு கிராம் | 57.55 | 57.10 | 57.50 |

தினகரன்

## உணவு பணவீக்கம் 7.47 சதவீதமாக குறைவு

பதிவு செய்த நாள் 5/20/2011 1:17:03 AM



புதுடெல்லி : மே 7ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் 7.47 சதவீதமாக குறைந்ததுள்ளது. முந்தைய வாரத்தில் இது 7.70 சதவீதமாக இருந்தது.

உணவு பணவீக்கம் குறித்த புள்ளி விவரத்தை நேற்று மத்திய அரசு வெளியிட்டது. உணவுப் பண்டங்களின் விலை சற்று குறைந்து வருவதால் பணவீக்க விகிதமும் சற்று குறைந்துள்ளது. அண்மைக் காலமாக இரட்டை இலக்கத்தில் இருந்த உணவு பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்திற்கு இறங்கியுதுடன் கடந்த 2 வாரங்களில் கணிசமாக குறைந்துள்ளது.

குறிப்பிட்ட சில காய்கறிகள் மற்றும் உணவுப் பண்டங்களின் விலை குறைவு காரணமாக மே 7ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டின் பணவீக்கம் 0.23 சதவீதம் குறைந்து 7.47 சதவீதமானது. இருப்பினும் ஏப்ரல் மாதத்தில் நாட்டின் ஒட்டு மொத்த பணவீக்கம் 8.66 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டு பருவ மழை பரவலாக பெய்யும் என்று வானிலை மையம் கணித்துள்ளது.

இதனால் உணவு பொருட்களின் உற்பத்தி அதிகரித்து, அதன் மீதான விலை சீராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நாட்டின் பணவீக்க உயர்வை கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி அவ்வப்போது வட்டி விகிதத்தை உயர்த்தி வருகிறது. அவ்வாறாக 2010ம் ஆண்டின் மார்ச் மாதத்துக்குப்பின் இதுவரை 9 முறை வட்டியை உயர்த்தியுள்ளது.

## 33,000 டன் யூரியா இறக்குமதி

பதிவு செய்த நாள் 5/20/2011 1:16:16 AM



கொச்சி: குவைத்திலிருந்து 33 ஆயிரம் டன் யூரியா இறக்குமதி செய்யப்படும் என மத்திய அரசு நிறுவனமான பெர்டிலைசர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் திருவாங்கூர் (பேக்ட்) தெரிவித்துள்ளது. இது அடுத்த வாரம் கொச்சியை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஓரிரு வாரங்களில் பருவமழை தொடங்க உள்ளது. இதனால் விவசாயத்துக்கான உரம் மற்றும் யூரியாவுக்கான தேவை அதிகரிக்கும். உள்நாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், அவற்றை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் யூரியா நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் என பேக்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## முட்டை விலை 10 காசு சரிவு

பதிவு செய்த நாள் 5/20/2011 1:14:43 AM



நாமக்கல் : நாமக்கல்லில் முட்டை விலை 10 காசுகள் குறைக்கப்பட்டு, ஒரு முட்டையின் கொள்முதல் விலை 220 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று

நடைபெற்றது. கூட்டத்தில், தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை குறைந்து வருகிறது.

மேலும், என்.இ.சி.சி அறிவித்த விலையில் இருந்து குறைந்த விலைக்கே வியாபாரிகள் முட்டை வாங்கி வருவதால் முட்டை விலையை குறைக்க வேண்டும் என பண்ணையாளர் வலியுறுத்தினர். முட்டை கொள்முதல் விலையில் 10 காசுகள் குறைத்து, ஒரு முட்டை விலை 220 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டைக் கோழி விலை ரூ.42 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ஸ157 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.